# ST. XAVIER'S COLLEGE (AUTONOMOUS)
# PALAYAMKOTTAI - 627 002

(Recognized as "College with Potential for Excellence" by UGC &
Accredited by NAAC at A++ Grade with a CGPA of 3.66 out of 4)

---

## ANNUAL REPORT 2022-2023

## SERVICE ORGANIZATIONS

## அன்னை தெரசா மகளிர் விடுதி
## சவேரியார் கலைமனைகளின் அங்கமாய்...

தூய சவேரியார் கலைமனைகளில் முக்கியமான அங்கமாய்த் திகழ்கிறது எம் அன்னை தெரசா மகளிர் விடுதி. எமது விடுதி துவங்கப்பட்டு 12 வருடங்கள் மனமகிழ்வோடு கடந்திருக்கிறது.

புனித அன்னை தெரசா மாணவியர் விடுதியின் இயக்குநராக கடந்த 4 ஆண்டுகள் வழிநடத்துபவர் அருட்சகோதரி. சிசிலி JMJ அவர்கள். அவரின் வழிகாட்டலிலும், இவ்விடுதியின் துணை இயக்குநர்களாக சிறப்போடு பணிபுரியும் அருட்சகோதரி. சொருபா JMJ மற்றும் செல்வி. ஜாஸ்மின் அவர்களுடைய தன்னலமில்லா பணிகளாலும் மகிழ்வோடு பயணிக்கிறது எமது விடுதி.

**விடுதியை மெருகூட்டும் வசதிகள்...**

மாணவிகள் குளிப்பதற்கு புதிதாக வெந்நீர் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்பான நீரைக் குடிப்பதற்கு வெந்நீர் மற்றும் குளிர்ந்த நீருக்கு புதிதாக இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. மேலும் இங்கு தங்கிப் பயிலும் ஒவ்வொரு மாணவிகளின் அறைகளிலும், அவர்களின் மிதியடிகளை வைப்பதற்கு ஏதுவாக மேசைகள் வைக்கப்பட்டுள்ளது.

மாணவிகளுக்கு மழைக்காலங்களில் உதவியாக இருக்க Sun Shade போடப்பட்டுள்ளது. மாணவிகளின் அறைகளில் கட்டில்கள் போடப்பட்டுள்ளது. விடுமுறை நாட்களில், மாணவிகள் விளையாடுவதற்கு விளையாட்டு பொருட்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளது. மாணவிகளின் பெற்றோர்கள் வார விடுமுறைகளில் வந்து அமர்வதற்கு கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. மாணவிகளுக்குத் தேவையான மருந்து, மாத்திரைகள் வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

**எண்ணிக்கையில் ஒரே குடும்பமாய்…**

இந்த ஆண்டு காலை நேரக் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை 101. மாலை நேரக் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை 94. மொத்தம் 195 மாணவிகள் எமது விடுதியில் தங்கிப் பயில்கின்றனர். இதில் 117 பேர் கத்தோலிக்க கிறிஸ்தவ மாணவிகள்.

**தலைமைப் பொறுப்புகளில் எமது மாணவிகள்…**

Shift 1 – செல்வி. A. ஜோவியா, மூன்றாம் ஆண்டு வேதியியல் துறை

Shift 2 – செல்வி. D. அன்பு பிரியதர்ஷினி, மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறை

பொதுத் தலைவிகள். செல்வி. ஓவியா மற்றும் செல்வி. சூசை,

மேலும் ஒவ்வொரு அறைக்கும் ஒரு தலைவியும், தினமும் காலைத் திருப்பலியில் வருகைப்பதிவேடு எடுப்பதற்கு ஆறு தலைவியரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மாணவிகள் விடுதியின் விதிமுறைகளை சிறப்பாக கடைபிடிக்க உதவுகின்றனர்.

**உறவுகளைப் பலப்படுத்திய தருணங்களில் சில….**

- 01.08.2022 தேதி முதல், எமது மாணவிகளுக்கு தினமும் காலையில் யோகா பயிற்சி கொடுக்கப்படுகிறது.
- 05.09.2022 அன்று, எம் விடுதியில், இந்த இல்லத்தின் பாதுகாவலியான புனித. அன்னை தெரசா நினைவு தினம் மற்றும் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டன.
- 26.10.2022 அன்று எம் விடுதியில் தீபாவளி திருநாள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

டிசம்பர் 6, 7 அன்று எம் விடுதி மூன்றாம் ஆண்டு மாணவிகள் இரண்டு நாட்கள் இன்பச் சுற்றுலாவாக கேரள மாநிலம், கொச்சினுக்கு சென்று வந்தார்கள்.

- டிசம்பர் 19 அன்று கிறிஸ்துமஸ் திருவிழா கொண்டாடப்பட்டது. அன்று மாலை ஒரு சிறிய கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. அதில் அருட்சகோதரர். குழந்தை சே.ச, அருட்தந்தை. வின்சென்ட் சே.ச, அருட்தந்தை. ராய்ஸ் சே.ச, வருகை தந்து கிறிஸ்து பிறப்பு நற்செய்திகளை அளித்தார்கள்.
- 05.01.2023 தேதி முதல் 07.01.2023 தேதி வரை பொங்கல் விழாவை முன்னிட்டு, விடுதியில் பல்வேறு போட்டிகளில், மாணவிகளுக்கும் உடன் உழைப்பாளர்கள் மற்றும் விடுதிப் பொறுப்பாளர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

- 09..02.2023 அன்று விடுதியின் இல்ல விழாவை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் நடுவர்களாக சேசு சபை அருட்தந்தையர்கள், பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.
- 14.02.2023 அன்று கல்லூரி ஆலயத்தில் லூர்து அன்னையின் திருவிழாவை முன்னிட்டு திருப்பலியும், தேர்ப்பவனியும் நடைபெற்றது.

**அன்னை தெரசாவை போல அன்பில் சேவையும் சேவையில் அன்பும் கொண்டு வாழ்ந்து**

தொடர்ந்து பயணிப்போம்! தோழர்களாய் வீறுநடைபோடுவோம்,
இந்தச் சமுதாயத்தின் கனவுகளை நனவாக்கிட….